2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

வெங்கடேஸ்வரபுரம் சிறு விவசாயிகள் இறவை நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண் 474.—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் சிறு விவசாயிகள் இறவை நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கம் அமைக்க 1972ஆம் வருடத்திலே அனுமதி கொடுத்தும் மேற்படி சங்கம் நாளது தேதிவரை ஆரம்பிக்கப்படாமல் ஏன் உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: வெங்கடேஸ்வரபுரம் சிறு விவசாயிகள் இறவைப் பாசன கூட்டுறவு சங்கம் (எஸ்.பி.எல். 17) 12—6—1972 அன்று பதிவு செய்யப்பட்டு, 22—6—1972-லிருந்து வேலை துவக்கப்பட்டது. எனவே சங்கம் இன்னும் ஆரம்பிக்கப் படாமல் உள்ளது என்று கூறியிருப்பது சரியன்று.

திரு. இரா. தாமரைக்கனி: இந்தக் கேள்வியைப் போடும் போது இந்தச் சங்கம் துவக்கப்படவே இல்லை. இப்போது தான் இந்தச் சங்கம் கேள்விக்காக துவங்கப்பட்டிருக்கிறது. ஆதலால், இதுவரை, ஒன்பது ஆண்டுகளாக இந்தச் சங்கம் துவங்கப்படாமல் இருந்ததற்கு காரணமாக இருந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது சரியல்ல. இந்தச் சங்கம் 22—6—1972-லேயே துவங்கப்பட்டுவிட்டது.

டி.யூ. சி. எஸ். நிர்வாகிகள் தேர்தல்.

*வினா எண் 475.—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டி.யு.சி.எஸ்.-ல் கடந்த சில ஆண்டுகளாக பங்குதாரர்கள் அடங்கிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெறவில்லை என்பதை அறிந்து தேர்தல் நடத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் தேர்தல் எப்போது நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) 1980ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்ட முன் வடிவு சட்டமாக்கப்பட்ட பின்பு கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும். அவ்வாறு ஏனைய சங்கங்களுக்குத் தேர்தல் நடைபெறும்போது டி.யு.சி.எஸ்.-க்கும் நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1904 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்த டி.யூ.சி.எஸ்.-ல் நிர்வாகிகள் தேர்தல் நடத்தாததால் ஏராளமான நஷ்டம் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா? அதைத் தவிர்ப்பதற்கு உடனடியாக தேர்தல் நடத்தப்படுமா ? பொதுவாக நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம், உதாரணத்திற்காகச் சொல்வேன், சென்னை பெஸண்ட் நகரில் ஒரு டி.யூ.சி.எஸ். அங்காடி இருக்கிறது. அது ஏற்கனவே நஷ்டத்தில் ஓடுகிறது. பக்கத்தில் ஏறக்குறைய ஆறாயிரம் ரூபாய்க்கு ஒரு கட்டடத்தை வாடகைக்கு எடுத்து ஒரு ஆண்டு காலமாக அது மூடிக் கிடக்கிறது. ஏறக்குறைய மூன்றரை இலட்சம் ரூபாய் செலவில் அதை அலங்கரிக்க ஏற்பாடு செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட நிர்வாகக் கேடுகள் இருப்பதால்தான் டி.யூ.சி.எஸ். நஷ்டத்தில் ஓடுகிறது. ஆகவே அதை கவனிப்பதற்காக பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, பங்குதாரர்களைக் கொண்டு, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : டி.யூ.சி.எஸ். கிளைகளுக்கு தற்போதுகூட பொது மக்களுடைய மெம்பர்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழு கூட இருந்து வருகிறது. ஆனாலும் முறைப்படி தேர்தல் நடந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் கீழ் அந்த நிர்வாகத்தைக் கொண்டு வருகிறபோதுதான் மக்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்கக் கூடிய அளவிற்கு நிர்வாகம் இருக்க முடியும் என்று அரசும் நம்புகிறது. அதன் அடிப்படையில் விரைவில் தேர்தல் நடத்த, வர இருக்கிற சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் தேர்தல் நடத்தப்படும்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, தற்போது டி.யூ.சி.எஸ். எவ்வளவு நஷ்டத்தில் நடை பெறுகிறது ? அங்கே பணியாற்றுகிற ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படாமல், அடிப்படை ஊதியம் அவர்களுக்கு அளிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? உடனடியாக அந்த ஊழியர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தை நிர்ணயித்து அவர்களுக்குண்டான வசதிகளைச் செய்து கொடுக்க அரசு முன் வருமா?

1981 மார்ச் 25]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : டி.யூ.சி.எஸ். அங்காடிகள் அனைத்துமே நஷ்டத்தில் இயங்கவில்லை. சில அங்காடிகள் ஆங்காங்கே டர்ன் ஓவர் குறைவாக இருப்பதால் நஷ்டத்தில் இயங்கலாம். மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடுவார்களேயானால் தகவல் தரப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : டி.யூ.சி.எஸ்.-ல் கூட்டுறவுத் துறையில் கடந்த ஏழு எட்டு ஆண்டுகளாக தேர்தல்கள் நடைபெறாத காரணத்தால்—மிகச் சிறப்பாக தமிழ்நாட்டில் பெயர் எடுத்த கூட்டுறவுத் துறையில் தேர்தல்கள் நடத்தப்படவில்லையே என்று மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் நினைக்கிறார்கள். மிகவும் அறிவார்ந்த தமிழ்நாட்டில் அந்தக் குறைபாடு இருக்கிறது. ஆகவே டி.யூ.சி.எஸ்-ல் உடனடியாகத் தேர்தல் நடத்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

(முற்பகல் 9-40.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் கொண்டுவரப்படும் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன், 6 மாத காலத்திற்குள் தேர்தல் நடத்தப்படும் என்று நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். அதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நடத்துவதற்கு இடையில் உடனடியாக அனைத்துக் கட்சிகளையும், கூட்டுறவாளர்களையும், கூட்டுறவு இயக்கத்தைச் சார்ந்தவர்களையும் கொண்ட ஆலோசனைக் குழு அமைத்து, இந்த டி.யு.சி.எஸ். நிர்வாகத்தை சிறப்பாக நிர்வகிக்க அரசு முன் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் கேட்ட துணைக் கேள்வி, பெசன்ட் நகரில் இருக்கக்கூடிய அங்காடிக்குப் பக்கத்தில் ஒரு அங்காடியை உருவாக்குவதற்கு ஏறத்தாழ 6,000 ரூபாய் வாடகை கட்டிடத்தை எடுத்து, ஓராண்டாக அப்படி வாடகைக் கொடுத்து, அதை அலங்கரிப்பதற்காக $3\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு, வீணாக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி அரசு கவனிக்குமா ? இதிலே ஈடுபட்டுள்ள அரசு அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய தகவல் எனக்கு கிட்டவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சற்று விவரமாக இதைப்பற்றித் தெரிவித்தால், கண்டிப்பாக இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.